# Verified RealEstate™

Your trusted partner for buying, selling, and managing property, ensuring hassle-free service with 100% transparency.

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996

**Official Property Record**

Digitally Verified Record - Powered by Verified RealEstate™



19

## கோயம்புத்தூர் உள்ளூர் திட்டக் குழும உறுப்பினர் செயலர் (பொறுப்பு) அவர்களின் நடவடிக்கைகள்

**முன்னிலை: திரு. கி. சண்முகம், எம்.இ., எம்.பி.ஏ.,**

**திட்ட அனுமதி**

**நகர் ஊரமைப்புச்சட்டம் 1971 பிரிவு 49-ன் கீழ்**

நாள்: **27.09.2019**

ந.க.எண். **2564/2018/உதிகு-1**
தி.அ.எண். **206/2019**
உள்ளாட்சியின் பெயர்: **கோவை மாவட்டம் (தீத்திபாளையம் ஊராட்சி)**

பொருள் : மனைப்பிரிவு - கோயம்புத்தூர் உள்ளூர் திட்டக் குழுமப்பகுதி - கோயம்புத்தூர் மாவட்டம் - பேரூர் வட்டம் - தீத்திபாளையம் ஊராட்சி மற்றும் கிராமம் - க.ச.எண்.184/1A1B2, 1A2B2, 187/1A1A-ல் **3.14 ½ ஏக்கர் (அ) 12730 சமீ** பரப்பளவில் அமையும் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவுக்கு - திட்ட அனுமதி வழங்குதல் - தொடர்பாக.

பார்வை :
1. மனுதாரர் G. விவேகானந்தன், கோயம்புத்தூர் அவர்கள் விண்ணப்பம் நாள் 23.05.2019
2. தனி அலுவலர், தீத்திபாளையம் ஊராட்சி அவர்கள் கடிதம் ந.க.எண். 2/2018 /நி.உ.மா நாள் 04.06.2018, 10.09.2019
3. மனுதாரர் வளர்ச்சி கட்டணம் செலுத்தப்பட்ட நாள் 20.09.2019

*****

உத்தரவு:

கோயம்புத்தூர் உள்ளூர் திட்டக் குழுமம், கோயம்புத்தூர் மாவட்டம், பேரூர் வட்டம், தீத்திபாளையம் ஊராட்சி மற்றும் கிராமம், க.ச. எண். 184/1A1B2, 1A2B2, 187/1A1A-ல் **3.14 ½ ஏக்கர் (அ) 12730 சமீ** பரப்பளவில் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவுக்கு **ம.வ/கோஉதிகு.எண்.175/2019** என எண்ணிட்டு தொழில்நுட்ப அனுமதியும், **திட்ட அனுமதி எண்.206/2019** என எண்ணிடப்பட்டு கீழ்கண்ட சிறப்பு நிபந்தனைகள் மற்றும் பொது நிபந்தனைகளின்படி திட்ட அனுமதியும் அளிக்கப்படுகிறது.

மனுதாரர் தேவையான உரிமங்களை மற்ற விதிகளின் கீழ் சம்பந்தப்பட்ட உள்ளாட்சியிடம் பெற்றுக் கொள்ள வேண்டும்.

## சிறப்பு நிபந்தனைகள்

**Tamil Nadu Combined Development and Building Rules 2019, விதி 6(9) படிவம்"C"ன் பின் குறிப்புப்படி,**

நகர் ஊரமைப்புத் துறை சட்டப்பூர்வமாக தொழில் நுட்ப அனுமதி/திட்ட அனுமதி அளிப்பதன் மூலம் விண்ணப்பதாரரின் பேரில் உள்ள நில உரிமையை உறுதிப்படுத்தவில்லை. தொழில் நுட்ப அனுமதி / திட்ட அனுமதி அளிப்பதற்கு முன்பு விண்ணப்பதாரரின் விண்ணப்பத்துடன் சமர்ப்பித்த ஆவணங்களில் (கிரையப்பத்திரம், குத்தகை பத்திரம், பட்டா, தானப்பத்திரம், பொது அதிகார பத்திரம் மேலும் பல) விண்ணப்பதாரர் வளர்ச்சி செய்ய உரிமையுள்ளதா என்று மட்டுமே சரிபார்க்கப்படுகிறது. அதன் மூலம் முதற்கட்டமாக விண்ணப்பதாரருக்கு வளர்ச்சி செய்யஉரிமை உள்ளதா என்று பார்க்கப்படுகிறது.

சொத்தினை வாங்க விரும்பும் எந்த நபரும், விண்ணப்பதாரருக்கு சொத்தின் மீது உள்ள உரிமையை தனியாக உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். மேலும் அதன் மேல் வேறுயாரேனும் தனிநபர் உரிமை கோரினால் அவர்கள் அதனை பொருத்தமான தகுதியுள்ள நீதிமன்றத்தின் முன் தீர்த்துக்கொள்ளலாம். இதனை முடிவு செய்ய நகர் ஊரமைப்புத் துறை பொருத்தமான அமைப்பு அல்ல.

2) நகர் ஊரமைப்பு ஆணையர் சென்னை அவர்களது சுற்றறிக்கையின்படி "உள்ளாட்சிக்கு தானமாக வழங்கப்பட்ட இடங்களை உள்ளாட்சியின் பெயருக்கு மாற்றி வருவாய்த்துறை சர்வே எண். உட்பிரிவுகள் செய்து அதற்கான விபரங்கள் பெறப்பட்ட பின்னரே உள்ளாட்சியால் மனைப்பிரிவுக்கு இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்.

2) The Tamil Nadu Government in G.O.Ms No. 112, Housing and Urban Development Department Dated. 22.06.2017 has approved the Tamil Nadu Real Estate (Regulation & Development) Act 2016. The Promoter has to advertise, market, book, sell or offer for sale, or invite persons to purchase in any manner any plot, apartment or building, as the case may be, in any Real Estate Project or Part of it only after registering the Real Estate Project with the Real Estate Regulatory Authority.

## பொது நிபந்தனைகள்

1. இந்த திட்ட அனுமதியானது கோயம்புத்தூர் உள்ளூர் திட்டக்குழுமத்திற்கு உட்பிரிவு 1 மற்றும் 2 பிரிவு 91-A நகர் ஊரமைப்புச்சட்டம் 1971 (சட்டம் 35 – 1972)ன் கீழ் ஒப்புதல் வழங்கப்பட்டதாகும்.
2. பிரிவு 79 நகர் ஊரமைப்புச் சட்டம் 1971 (சட்டம் 35–1972)ன் படி எந்த நபராவது இந்த உத்திரவு அல்லது தீர்மானத்தினால் பிரிவு 49 அல்லது 64(1)ன்

கீழ்மறுக்கப்பட்டிருப்பின் உத்திரவு அளிக்கப்பட்ட நாளிலிருந்து இரண்டு மாதத்திற்குள் நகர் ஊரமைப்பு இயக்குநர்/அரசுக்கு மேல்முறையீடு செய்யலாம்.

3. கோயம்புத்தூர் உள்ளூர் திட்டக்குழும உறுப்பினர் செயலர் திட்டஅனுமதி அளித்த பிறகு
   (1) திட்டஅனுமதி பெற தவறான விபரம் மனுதாரரால் சமர்ப்பிக்கப்பட்டிருந்தாலோ,
   (2) சட்டப்படி சரியான வழிமுறைகள் கடைபிடிக்கத் தவறியிருந்தாலோ,உறுப்பினர் செயலர் மேற்கண்ட காரணத்தின் அடிப்படையில் திட்ட அனுமதியினை மாற்றவோ ரத்து செய்யவோ உரிமையுண்டு.

4. தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தில் கண்டுள்ள நிபந்தனைகள் நிறைவேற்றப்படவேண்டும்.

5. வழங்கப்பட்ட திட்ட அனுமதிக்கு மற்றும் பயன்பாட்டுக்கு மாறாகவும் கூடுதலாகவும் மனைப்பிரிவு அபிவிருத்திக்கு வரிவிதிக்கப்படின், அத்தகைய மீறல்களுக்கு சம்பந்தப்பட்ட உள்ளாட்சியே (**தீத்திபாளையம் ஊராட்சி உட்பட**) பொறுப்பாகும் எனத் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

6. உள்ளாட்சி சட்டத்தின்படி வரிவிதிக்கப்படுவதற்கு முன்னர் வழங்கப்பட்ட திட்ட அனுமதிக்கு மற்றும் பயன்பாட்டுக்கு மாறாகவும், கூடுதலாகவும் மனைப்பிரிவு அபிவிருத்திக்கு இவ்வலுவலகத்தால் வழங்கப்பட்ட அதிகார பகிர்வின்படி நகர் ஊரமைப்புச் சட்டம் 1971 பிரிவு 56 மற்றும் 57 ன்படி நடவடிக்கை ஏதுவாக எடுக்கப்பட வேண்டும் எனவும் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

7. **திட்டஅனுமதி வழங்கப்பட்ட வரைபடத்தின் நகலினை மனையிடத்தின் முன்புறத்தில் எந்நேரமும் பார்க்கத்தக்க வகையில் காட்சிக்கு (Display) வைக்கப்படவேண்டும்.**

**உறுப்பினர் செயலர் (பொறுப்பு)**
**கோயம்புத்தூர் உள்ளூர் திட்டக்குழுமம்,**
**கோயம்புத்தூர் - 12.**

இணைப்பு

முத்திரையிட்ட வரைபடம் - 2
நிபந்தனை படிவம் - 2

பெறுநர்

தனி அலுவலர்/வட்டார வளர்ச்சி அலுவலர்,
தீத்திபாளையம் ஊராட்சி,
பேரூர் வட்டம்,
கோயம்புத்தூர் மாவட்டம்.

**நகல் மனுதாரர் (உள்ளாட்சி மூலமாக)**

திரு. G. விவேகானந்தன்,
த/பெ. S. கோபால்சாமி.
2/313, சிறுவாணி மெயின் ரோடு,
தீத்திபாளையம் அஞ்சல்,
கோயம்புத்தூர் - 641010

29

தீத்திபாளையம் ஊராட்சி - தனி அலுவலர் அவர்களின் நடவடிக்கைகள்
முன்னிலை:திரு.வில்.சுதாகரன்

---

மனைப்பிரிவு அனுமதி எண்:01/2019-20 நாள்:18.10.2019

பொருள்: மனைப்பிரிவு-பேரூர் வட்டம். தீத்திபாளையம் கிராமம், க.ச.எண். **184/1A1B2,1A2B2,187/1A1A** காலையில் அமையும் குடியிருப்பு மனைப்பிரிவு அங்கீகாரம் வழங்குதல் சம்மந்தமாக.

பார்வை:
1. திரு.G.விவேகானந்தன் S/o. கோபால்சாமி அவர்களின் விண்ணப்பம்
2. நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் (பொ), கோவை அவர்களின் நக.எண்.2564/2018 உ.தி.கு-1 நாள்:27.09.2019
3. திரு G.விவேகானந்தன் S/o. கோபால்சாமி அவர்களின் செட்டில்மெண்ட் பத்திர பதிவு எண்.5609/2019 நாள்:14.08.2019
4. தீத்திபாளையம் ஊராட்சி மன்றத் தீர்மானம் எண்.1004/ நாள்:16.10.2019

உத்தரவு:

1. கோவை மாவட்டம் பேரூர் வட்டம், தீத்திபாளையம் கிராமம், க.ச.எண் **184/1A1B2,1A2B2,187/1A1A** நெ.காலையில் ஏக்கர்.**3.14½** விஸ்தீரணமுள்ள பூமியை லே அவுட் செய்து குடியிருப்பு மனையிடங்களாகப் பிரித்து உள்ளதற்கு பார்வை 2-ல் காணும் நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் (பொ), கோவை அவர்களின் கடிதத்தின் மூலம் ந.க.எண்.2564/2018 உ.தி.கு-1 நாள்: 27.09.2019 – ன் படி உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவுக்கு தொழில்நுட்ப ஒப்புதல் வரப்பெற்று உள்ளது

2. மேற்கண்ட தொழில்நுட்ப ஒப்புதலின் படி பூங்கா மற்றும் சாலைகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ள இடங்களை தொண்டாமுத்தூர் சார்பதிவாளர் அலுவலக பத்திரப் பதிவு எண்.5609/2019 ன் படி 14.08.2019 தானசெட்டில்மெண்ட் பத்திரம் மூலம் பதிவு செய்து ஊராட்சிக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது.

3. மேற்கண்ட மனைப்பிரிவில் அமைந்துள்ள சாலைகளை தார்சாலையாக அமைக்கப்பட்டுள்ளது.

4. மேற்கண்ட மனைப்பிரிவில் மனைப்பிரிவு உரிமையாளரால் தெருவிளக்குகளுக்கு தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு முறையாக கட்டணம் செலுத்தப்பட்டுள்ளது. மேற்படி தெருவிளக்குகள் அமைக்கும் பணிகள் முடிவுறும் நிலையில் உள்ளது.

5. மேலும் மேற்கண்ட குடியிருப்பு மனைப்பிரிவுகளுக்கு அனுமதி கட்டணமாக ரூ.45000/- (ரூபாய் நாற்பத்தி ஐந்தாயிரம் மட்டும்) பலவகை ரசீது எண்.BB No.099565. நாள்.10.10.2019-ல் ஊராட்சிக்கு செலுத்தப்பட்டுள்ளது.

எனவே, மேற்படி நிலத்தில் குடியிருப்பு மனையிடங்களாகப் பிரித்துள்ள மனை எண்கள். 1முதல் 75 வரைகளான மனைகள் மற்றும் கடை மனை விற்பனை செய்வதற்கு தீத்திபாளையம் ஊராட்சியின் மூலம் அங்கீகாரம் வழங்கப்படுகிறது.

இணைப்பு: வரைபடம் மற்றும் நிபந்தனைகள் (2)

18/x/19

தனி அலுவலர்
தீத்திபாளையம் ஊராட்சி

18.10.19 18.10.19

| Area Statement of Project Kingsman Villas | | | | |
|---|---|---|---|---|
| Site No | Area in Sq.Mtr | | Site No | Area in Sq.Mtr |
| 1 | 157.10 | | 39 | 52.03 |
| 2 | 158.86 | | 40 | 52.03 |
| 3 | 175.49 | | 41 | 52.03 |
| 4 | 121.42 | | 42 | 52.03 |
| 5 | 111.48 | | 43 | 52.03 |
| 6 | 111.48 | | 44 | 54.81 |
| 7 | 125.42 | | 45 | 150.32 |
| 8 | 125.42 | | 46 | 149.57 |
| 9 | 136.75 | | 47 | 124.77 |
| 10 | 121.05 | | 48 | 121.61 |
| 11 | 111.48 | | 49 | 148.36 |
| 12 | 111.48 | | 50 | 147.71 |
| 13 | 125.42 | | 51 | 147.71 |
| 14 | 125.42 | | 52 | 147.71 |
| 15 | 136.75 | | 53 | 147.71 |
| 16 | 126.63 | | 54 | 147.71 |
| 17 | 139.35 | | 55 | 142.88 |
| 18 | 139.35 | | 56 | 156.45 |
| 19 | 139.35 | | 57 | 184.97 |
| 20 | 139.35 | | 58 | 55.74 |
| 21 | 139.35 | | 59 | 55.74 |
| 22 | 139.35 | | 60 | 55.74 |
| 23 | 139.35 | | 61 | 55.74 |
| 24 | 139.35 | | 62 | 55.74 |
| 25 | 139.35 | | 63 | 55.74 |
| 26 | 139.35 | | 64 | 55.74 |
| 27 | 135.36 | | 65 | 55.74 |
| 28 | 138.33 | | 66 | 55.74 |
| 29 | 139.17 | | 67 | 55.74 |
| 30 | 111.48 | | 68 | 52.03 |
| 31 | 111.48 | | 69 | 53.88 |
| 32 | 111.48 | | 70 | 163.79 |
| 33 | 111.48 | | 71 | 162.95 |
| 34 | 111.48 | | 72 | 138.98 |
| 35 | 111.48 | | 73 | 138.33 |
| 36 | 111.48 | | 74 | 137.31 |
| 37 | 52.03 | | 75 | 143.44 |
| 38 | 52.03 | | Shop | 192.68 |
| **Total** | **4772.48** | | **Total** | **3973.24** |

| Total No. of Sites | Total Area Sq.Mtr |
|---|---|
| **75+Shop 1** | **8745.73** |

❖ **வேளாண்மைப் பொறியியல் துறை** ❖

39

| அனுப்புநர் | பெறுநர் |
|---|---|
| திரு வி. தெய்வேந்திரன், எம்.இ.(விவ),<br>தலைமைப் பொறியாளர் (வே.பொ.) ,<br>487, அண்ணாசாலை, நந்தனம்,<br>சென்னை–600 035. | ஆணையாளர்,<br>நகர் மற்றும் ஊரமைப்புத் துறை,<br>807, அண்ணாசாலை,<br>சென்னை–600 002. |

<u>கடிதம் எண்.மபாஆ(க)1/17601/2018 நாள் 16.05.2018</u>

அய்யா,

பொருள் : வேளாண்மைப் பொறியியல் துறை - மலையிடப்பாதுகாப்பு - கோவை மாவட்டம் பேரூர் வட்டம் - தீத்திப்பாளையம் கிராமம் க.ச.எண்.184/1A1B,184/1A2B, 187/1A1 (Part) நிலம் விவசாய உபயோகப் பகுதியிலிருந்து குடியிருப்பு உபயோக பகுதியாக நில உபயோக மாற்றம் செய்து வீட்டுமனை பிரிவுகளாக அமைக்க தடையின்மை சான்று கோரியது - மலையிடப்பாதுகாப்பு குழு அனுமதி வழங்கும் பொருட்டு வேளாண்மை பொறியியல் துறையின் குறிப்புரை வழங்குதல் - தொடர்பாக.

பார்வை : செயற் பொறியாளர் (வே.பொ), கோவை கடித எண். இ/1778/2018 நாள் 09.05.2018.

❖

பார்வையில் கண்டுள்ள கடிதத்தில் கோவை, செயற்பொறியாளர்(வே.பொ) அவர்கள் கோவை மாவட்டம், பேரூர் வட்டம், தீத்திப்பாளையம் கிராமம் புல எண்கள். 184/1A1B, 184/1A2B மற்றும் 187/1A1 Part-ல் உள்ள 3.14 1/4 ஏக்கர் பரப்பினை விவசாய உபயோகப் பகுதியிலிருந்து குடியிருப்பு உபயோகப் பகுதியாக நில உபயோக மாற்றம் செய்து வீட்டுமனைப் பிரிவுகள் அமைத்திட மனுதாரர் திரு ஜி. விவேகானந்தன், த/பெ எஸ். கோபால்சாமி, 2/313, சிறுவாணிமெயின்ரோடு, தீத்திப்பாளையம், கோவை-10 அவர்களுக்கு மலையிடப்பாதுகாப்பு குழு அனுமதி வழங்கும் பொருட்டு வேளாண்மை பொறியியல் துறையின் மண்வளப்பாதுகாப்பு அடிப்படையிலான குறிப்புரை கீழ்கண்டவாறு வழங்கப்படுகிறது.

1) நில உபயோக மாற்றம் மற்றும் வீட்டுனைப்பிரிவுகள் அமைக்க கோரும் நிலம் தீத்திப்பாளையம் கிராமம் புல எண்கள் 184/1A1B, 184/1A2B மற்றும் 187/1A1-part-ல் 3.14 1/4 ஏக்கர் பரப்பு கொண்டுள்ளது.

2) நிலம் புன்செய் வகைப்பாட்டினைச் சார்ந்தது. நிலத்தன் மண்வகை Red loam ஆகும்.

3) நிலத்தின் வாட்டம் மேற்கிலிருந்து கிழக்காகவும் தெற்கிலிருந்து வடக்காகவும் 1%-க்கும் குறைவாக உள்ளது.

4) நிலத்தில் குடியிருப்பு கட்டிடங்கள் அமைய உள்ளதால் மண் அரிமானம் மற்றும் நிலச்சரிவிற்கான வாய்ப்புகள் மிகவும் குறைவு.

5) குடியிருப்பு கட்டிடங்கள் அமைய உள்ளதால் அருகாமையில் உள்ள நிலங்களில் மண் அரிமான பாதிப்புகள் ஏற்பட வாய்ப்பு மிகவும் குறைவு.

**நிபந்தனைகள் :-**

1) கட்டப்படவுள்ள குடியிருப்பு மனை கட்டிடங்களில் வடிகால் வசதிகள் திறம்படச் செயல்படும் வகையில் தக்கவாட்டத்தில் அருகிலுள்ள நீர்வழிப்பகுதியைச் சென்றடையும் வகையில் அமைக்கப்பட வேண்டும்.

2) நிலத்தடி நீர் மட்டம் பாதுகாக்கும் வகையிலும் செறிவூட்டும் வகையிலும் கட்டப்படவுள்ள குடியிருப்பு மனை கட்டிடங்களில் மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புகள் அமைக்கப்பட வேண்டும்.

3) கட்டப்படவுள்ள குடியிருப்புமனை கட்டிடங்களிலிருந்து வெளியேறும் கழிவுநீர் சுத்திகரிக்கப்பட்டு மீண்டும் பிற உபயோகங்களுக்கும் மரம், செடிகளுக்கு உயிர் நீராகவும் பயன்படுத்தப்பட வேண்டும்.

4) மண் அரிமானம் தவிர்க்கும் வகையில் கட்டிடங்கள் சாலைகள் தவிர்த்த பிற இடங்களில் புல்வெளி மற்றும் மரங்கள் நட்டு பராமரிக்கப்பட வேண்டும்.

5) நிலத்தில் குடியிருப்பு மனை கட்டிடங்கள் கட்டும்போது ஏற்படும் தேவையற்ற மண் மற்றும் கட்டிடகழிவுகள் அருகிலுள்ள நீர்வழிப்பாதை மற்றும் நீர்நிலைகள் பாதிக்காவண்ணம் பாதுகாப்பாக அகற்றப்பட வேண்டும்.

6) மண்வளப்பாதுகாப்பு கருதி வேளாண்மை பொறியியல் துறை உயர் அதிகாரிகளால் வழங்கப்படும் அனைத்து கருத்துகள் மற்றும் முடிவுகளுக்கு மனுதாரர் கட்டுப்பட வேண்டும்.

மேற்கண்ட கோவை, செயற்பொறியாளர் (வே.பொ) அவர்களின் குறிப்புரைகளின் அடிப்படையிலும் வேளாண்மை பொறியியல் துறையின் நிபந்தனைகள் நிறைவேற்றப்படும் என மனுதாரர் அளித்துள்ள உறுதிமொழியின் அடிப்படையிலும் கோவை மாவட்டம், பேரூர் வட்டம், தீத்திப்பாளையம் கிராமம் புல எண்கள் 184/1A1B, 184/1A2B மற்றும் 187/1A1-part-ல் உள்ள 3.14 1/4 ஏக்கர் பரப்பளவு நிலத்தினை விவசாய உபயோகத்திலிருந்து குடியிருப்பு உபயோக பகுதியாக நில உபயோக மாற்றம் செய்து வீட்டுமனைப் பிரிவுகள் அமைக்க மனுதாரர் திரு ஜி.விவேகானந்தன், த/பெ எஸ்.கோபால்சாமி, 2/313, சிறுவாணி மெயின்ரோடு, தீத்திப்பாளையம், கோவை-10 அவர்களுக்கு மலையிடப்பாதுகாப்பு குழு அனுமதி வழங்கும் பொருட்டு வேளாண்மைப் பொறியியல் துறையின் மண்வளப்பாதுகாப்பு அடிப்படையிலான பரிந்துரை தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

ஒம்) வி. தெய்வேந்திரன்,
தலைமைப் பொறியாளர் (வேபொ)

நகல் - திரு ஜி.விவேகானந்தன்,
த/பெ எஸ்.கோபால்சாமி,
2/313, சிறுவாணி மெயின்ரோடு,
தீத்திப்பாளையம், கோவை-10.

நகல் - செயற் பொறியாளர் (வே.பொ) கோவை.

நகல் - மபாஆ(க)1/ இ.கோ / உதிரி -1

/ ஆணைப்படி/

உதவி செயற் பொறியாளர் (வே.பொ)

17/5/18



## our services doesn't just end there

### Buying & Selling Services

Property Buying Assistance, Property Selling Support, Market Price Analysis, Owner Outreach and Negotiation.

### Legal & Documentation Services

Certified EC, Patta, legal opinions, property verification, due diligence, litigation solutions, and legal heir certificates.

### Property Development & Approvals

Building plan approvals, construction, layout and sub-division approvals, zone conversion, and occupancy certification.

### NRI & Investment Services

Escrow Services, Rentals, Litigation Solutions, Property Valuation and Property Management

### Compliance & Special Services

Demolition, Vaasthu checks, regularization of unauthorized buildings, and office space solutions.



# empowering your real estate decisions with smart tools

## Property Valuation & Cost Estimation

Guideline Value, Apartment Composite Value, Stamp Duty & Registration Fees Calculator, Building Value Calculator, Capital Gains Calculator, Area Unit Converter, Length Unit Converter

## Ownership, Compliance & Legal Verification

Encumbrance Certificate (EC) Search, Find Your SRO, Temple Property Check, WAQF Property Check, View Patta/Chitta, View FMB, Patta Analyzer, EC Analyzer

## Zoning & Land Use Analysis

Land Use Zone Finder, CRZ Zone Check, Aquifer Zone Check, CBA Check, EWS Check, Road Width Check, Proposed Road Widening Check, FSI Calculator

## Property Documentation & Workflow Tools

Forms & Templates, Document Generator, Document Translation, Dictionary

## Vastu & Property Management Tools

Home Vastu Shastra, Plot Vastu Shastra, Property Management

Verified RealEstate™

We're honored to be part of your
real estate journey

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996
www.verified.realestate